MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

வெளிநாட்டு ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்





அக்டோபர் 2022

## இந்த இதழில்:


வேறுபடுத்தப்பட்ட- தடுப்பூசி பாதுகாப்பு விதிமுறைகள் நீக்கம்

அக்டோபரில் வரவிருக்கும் நிகழ்ச்சி

தீபாவளி ஒளியூட்டு நிகழ்ச்சி

# முக்கிய அறிவிப்புகள்



## 10 அக்டோபர் 2022 முதல் வேறுபடுத்தப்பட்ட தடுப்பூசி-பாதுகாப்பு விதிமுறைகள் (VDS/விடிஎஸ்) நீக்கம்

| நடவடிக்கைகள்: | தடுப்பூசி போட்ட, போடாத வெளிநாட்டு ஊழியர்கள் ஈடுபடலாமா? |
|---|---|
| உணவு, பானக் கடைகளில் (உதாரணம்: மது அருந்துமிடம், உணவகங்கள் ) உணவருந்துதல்  | ✓ |
| எந்த ஓர் நேரத்திலும் 500 பேருக்கு மேல் கூடும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்  | ✓ |

**வேறுபடுத்தப்பட்ட- தடுப்பூசி பாதுகாப்பு விதிமுறைகள் (VDS/விடிஎஸ்) நீக்கப்பட்ட போதிலும், தொடர்ந்து சமூகப் பொறுப்புகளை கடைப்பிடியுங்கள்!**




நீங்கள் இன்னும் தடுப்பூசி போடவில்லை எனில், போட்டுக்கொள்ளவும்



நல்ல தனிநபர் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்கவும்



உங்களுக்கு உடல்நலமில்லாவிட்டால் மருத்துவரைக் காணவும்.

# அக்டோபரில் வரவிருக்கும் நிகழ்ச்சி

## ஒன்றிணைந்து தீபாவளி கொண்டாடுவோம்!

- பல்வேறு மாலைநேர நடவடிக்கைகளில் ஈடுபட்டு எங்களோடு தீபாவளியைக் கொண்டாடி மகிழ்ந்திட எங்களது பொழுதுபோக்கு நிலையங்களுக்கு (RC) செல்லுங்கள்!

| தேதி | இடம் |
|---|---|
| 22 அக்டோபர் | கொக்ரேன் பொழுதுபோக்கு நிலையம், பென்ஜூரு பொழுதுபோக்கு நிலையம், துவாஸ் சவுத் பொழுதுபோக்கு நிலையம் |
| 23 அக்டோபர் | கிராஞ்சி பொழுதுபோக்கு நிலையம், பென்ஜூரு பொழுதுபோக்கு நிலையம், உட்லண்ட்ஸ் பொழுதுபோக்கு நிலையம் |
| 24 அக்டோபர் | கொக்ரேன் பொழுதுபோக்கு நிலையம், கிராஞ்சி பொழுதுபோக்கு நிலையம், பென்ஜூரு பொழுதுபோக்கு நிலையம், தெருசான் பொழுதுபோக்கு நிலையம் , துவாஸ் சவுத் பொழுதுபோக்கு நிலையம் |

கீழ்க்காணும் நடவடிக்கைகளும் உண்டு

- தீபாவளி நிகழ்ச்சி
- திருவிழா
- கதம்ப நிகழ்ச்சி, மேலும் பல

இந்த நிகழ்ச்சி குறித்து மேலும் விவரங்கள் அறிய உங்களுடைய ஃபாஸ்ட் (FAST) அதிகாரிகளுடன் பேசுங்கள்.



## எங்கள் புலம்பெயர்ந்த சமூகம்

ஷ்யாமை சந்தியுங்கள்! கட்டடங்கள், தெருக்கள், உருவப்படங்கள் ஆகியவற்றை புகைப்படம் எடுக்க மிகவிரும்பும் வெளிநாட்டு ஊழியர்.

பணம் சேமித்து புகைப்படக் கருவியை வாங்கியது முதலே அவர் அழகிய புகைப்படங்கள் எடுப்பதற்காக போகுமிடமெல்லாம் அதனை எடுத்துச் சென்றார்.

அவரது சில புகைப்படங்களை வெளியிட்டுள்ள எங்களுடைய ஃபேஸ்புக் பதிவிற்கு சென்று பாருங்கள்.

***சிங்கப்பூரில் உங்கள் வாழ்க்கையைப் பற்றி பகிர்ந்து கொள்ள சுவாரஸ்யமான கதை ஏதேனும் உள்ளதா? இந்த இணைப்பைக் கிளிக் செய்து அதனை எங்களுக்குத்*** தெரியப்படுத்துங்கள்

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்





## லிட்டில் இந்தியாவில் தீபாவளி ஒளியூட்டு விழா

லிட்டில் இந்தியா வர்த்தகர்கள், மரபுடைமைச் சங்கம் (லிஷா) 200 வெளிநாட்டு ஊழியர்களை லிட்டில் இந்தியாவின் தீபாவளி ஒளியூட்டு விழாவில் பங்கேற்க அழைத்திருந்தது.

உள்ளூர் பிரபலங்கள் நேரடி நிகழ்ச்சிகள் அரங்கேற்றியதால் நிகழ்ச்சியில் விழாக் குதூகலம் நிரம்பியிருந்தது .

## குளோபல் இந்திய அனைத்துலகப் பள்ளியில் காற்பந்துப் போட்டிகள்

அரசு சாரா அமைப்பான , பிக் அட் ஹார்ட், ஏஸ் (ACE) – உடன் இணைந்து வெளிநாட்டு ஊழியர்களுக்கும் அனைத்துலகப் பள்ளி மாணவர்களுக்கும் இடையேயான உட்புறக் காற்பந்துப் போட்டிகளை குளோபல் இந்திய அனைத்துலகப் பள்ளி ஏற்பாடு செய்தது.

பரிசுகள் பெற்றுக் கொண்ட வேளையில், காற்பந்தின் மூலம் மாணவர்களுக்கும் வெளிநாட்டு ஊழியர்களுக்கும் இடையில் மலர்ந்த நட்புறவும் பிணைப்பும் மிகவும் போற்றுதற்குரியதாக அமைந்தது.



## கரையோரப் பூங்காவிற்கு (Gardens by the Bay) சுற்றுலா நிகழ்ச்சி

சிங்கப்பூர் விபத்து உதவி மையம், சிங்கப்பூர் யூத் ஃபார் கிரைஸ்ட், ஏஸ் (ACE) ஆகிய அமைப்புகளோடு இணைந்து வெளிநாட்டு ஊழியர்களுக்கென்று கரையோரப் பூங்காவிற்கு சுற்றுலா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மிகப்பிரபலமான அந்த சுற்றுலாத்தலத்திற்கு சென்று பார்வையிட்ட பின்னர் ஊழியர்கள் “சோஜோர்ன் கஃபே” உணவகதிற்கு சென்று விளையாட்டு தின நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தொண்டூழியர்களுக்கும் வெளிநாட்டு ஊழியர்களுக்கும் அந்நாள் மிகக் குதூகலமாக அமைந்தது.




**நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப் பற்றி மேலும் அறிய இங்கே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!**

*அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!*

- ஏஸ் குழுமத்தின் ஃபேஸ்புக் பக்கம்
- ஏஸ் குழுமத்தின் டிக்டொக் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி